போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார், மட. இளஞ்செழியன்

நாள் 2 | திருவள்ளுவர் ஆண்டு 1980 மாசி 29 | சென்னை, 12—3—49 | விசய 28

சட்டசபையில் சத்திய சோதனை!

சென்னை சட்டசபையில்முன்பெல்லாம், சபையில், சபை நடந்துகொண்டிருக்கும்போதே, சபை உறுப்பினர்கள், பொடி போடலாமா, சிகரெட் பிடிக்கலாமா, ஆரஞ்சுப் பழம் அருந்தலாமா, குறட்டை விட்டுக்கொண்டே தூங்குவது பார்லிமெண்டரி முறையா அல்லது குறட்டை விடாமல் அமைதியாகத் தூங்குவது பார்லிமெண்டரி முறையா, எந்த முறைக்கு பிரிட்டிஷ் பாராளுமன்ற நடைமுறைப் புத்தகத்தில் ஆதாரமிருக்கிறது என்பனபோன்ற "அதி அற்புதமான", "மிக ருசிகரமான", "நாட்டு நலத்திற்கு மிகத் தேவையான", "பொறுப்பும் கண்ணியமுள்ள" விவாதங்கள் நடைபெற்று வருவது வழக்கம். ஆனால் மடாலய மசோதா சபையில் விவாதத்திற்கு வந்ததும், காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள், குறட்டை விட்டுக்கொண்டே தூங்குவதா விடாமல் தூங்குவதா என்பது போன்ற விவாதங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, மடங்களிலும் ஆலயங்களிலும் உள்ள ஊழல்களை ஒழிக்கவேண்டியது தேவையா அல்லவா என்ப



"இந்த ஆண்டு நீர் விதித்துள்ள வரிகள் எல்லாம் ஏழைகளையே கசக்கிப் பிழியக் ...டியனவாக உள்ளனவே, இது நியாயமா?" என்று கேட்ட சட்டசபை உறுப்பினர்களைப் ...ர்த்து, சென்னை நிதி அமைச்சர் கோபால ரெட்டியார், "நான் என்ன செய்யமுடியும்? ...ணக்காரர்களுக்குப் போடக்கூடிய வரிகளை எல்லாம் மத்திய சர்க்கார் போட்டுவிடுகிறார் ...ர் எனவே நான் ஏழைகள் மீதுதான் வரிபோட வேண்டியிருக்கிறது!" என்று பதில் ...றியிருக்கிறார்!

தைப்பற்றி காரசாரமாக விவாதிக்கத் தொடங்கிவிட்டனர். மடாலய மசோதா விவாதத்திற்கு வரும்வரை வம்பர் மடமாகவும் விளையாட்டு மைதானம்போலவும் விளங்கிவந்த சட்டசபை, அந்த மசோதாவைப்பற்றிய வாதப் பிரதிவாத விவாதத்தின் போதுதான் உண்மையான சட்டசபையாகவே மாறிற்று. அந்த சமயத்திலேதான் எத்தனை காங்கிரஸ் எம். எல் ஏ-க்களின் கதர் சட்டைக்குள்ளே கருப்புச் கட்டை அழகாக அமைந்திருக்கிறது என்பதையும், திராவிடர் கழகத்தின் சீர்திருத்தக்கொள்கைகளும்! கோட்பாடுகளும் சட்டசபை காங்கிரஸ் நண்பர்களின் உள்ளத்திலேயும் எவ்வளவு தூரம் ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது என்பதையும் நாம் நன்கறிய முடிந்தது.

இப்போது, சட்டசபையில், காங்கிரஸ் உறுப்பினர்களுக்கிடையே சத்திய சோதனை நடைபெற்று வருகின்றது—மிக ஆச்சரியமான சம்பவம்!

“காங்கிரஸ் ஒன்றுதான் இந்த நாட்டு மக்கள் எல்லோருடையவும் பிரதிநிதி ஸ்தாபனம். மக்களுக்கு நன்மை செய்யும் இயக்கம் இது ஒன்றே. ஏனைய இயக்கங்கள் எல்லாம் நன்மைக்குப் பதில் தீமையையே விளைத்துவருகின்றன.”

“எங்கே எப்போது தேர்தல் நடந்தாலென்ன? காங்கிரஸ் வெற்றி பெறுவது நிச்சயம். காங்கிரசின் பெயரால் ஒரு கழுதையை நிறுத்திவைத்தாலும் கழுதைதான் வெற்றி பெறுமே தவிர வேறு கட்சியினர் வெற்றி பெறுவது நடவாத காரியம்.”

“ஏழைகளுக்காகப் பாடுபடுகிற ஒரே ஒரு கட்சி காங்கிரஸ் தான். ஏழைபங்காளர்களின் இன்ப நிலையம், காங்கிரஸ்.”

“காந்திஜியின் கொள்கைகளை அப்படியே பின்பற்றி நடக்கும் ஸ்தாபனமே காங்கிரஸ்.”

இந்தவாசகங்களையும், இவை போன்ற ஏனைய பல வாசகங்களையும் காங்கிரஸ்காரர்கள் முன்பெல்லாம் அடிக்கடி எடுத்துச் சொல்வது வழக்கம். அவர்கள் இந்த வாசகங்களைச் சொல்லும்போது, அவர்களுக்கு, இவை சத்திய வாக்குகளாகவே தோன்றும்—இவற்றை யாரும் மறுத்துக் கூறினாலோ, இவை உண்மையல்ல என்று பேசினாலோ, கோபம் குதித்துக்கொண்டு வரும்; “இந்த வேத வாக்குகளைக் கூடவா மறுப்பது, மறுப்பவர் நாக்கு அழுகிவிடும்” என்றுபேசுவர், மறுத்து உரைக்கும் மனத்துணிவு படைத்தோரை ஏசுவர். இந்த வாசகங்களின் உண்மைத் தன்மையிலே அவர்களுக்கு அந்தக் காலத்தில் அவ்வளவு நம்பிக்கை! இப்போதோ!.........

இப்போது, இந்த “சத்திய வாக்குகள்” எல்லாம் உண்மையில் சத்திய வாக்குகள்தானா, இவை உண்மையின் உருவங்கள்தானா என்பதில் அவர்களுக்கே சந்தேகம் பிறந்துவிட்டது—சத்தியத்தை சோதனை செய்யத் தொடங்கிவிட்டனர் அன்னார்! சத்திய சோதனை, இப்போது சட்டசபையில், மிக ஜரூராக நடந்து கொண்டிருக்கிறது.

டாக்டர் சுப்ரமண்யம் ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ! அவர் சட்ட மன்றத்தில் பேசியிருக்கும் போக்கைப் பாருங்கள் :—

“நாம் தேர்தலில் வெற்றிபெற்ற போது மக்கள் என்ன வெல்லாமோ எதிர்பார்த்தார்கள். ஆனால் நாமோ மக்களை மறந்துவிட்டோம்!’

மக்களை மறந்தே விட்டனராம் இந்த மகானுபாவர்கள்! சட்டசபையில் கூறிக்கொள்கிறார்கள் இந்த பெருமைக்குரிய சம்பவத்தை — சற்றேனும் வெட்கமின்றி! அதுவும் முஸ்லிம் லீகர்கள் எதிரில்! வெட்கம் வேண்டாமா இவர்களுக்கு?

மக்களை மறந்துவிட்டோம் என்று கூறிவிட்டு, டாக்டர் சுப்ரமண்யம், மேலும் பேசுகிறார் : **“நாம் மக்களுக்கு என்ன நன்மை செய்திருக்கிறோம்? கிராம மக்களுக்கு வைத்திய வசதிகூட செய்து தரவில்லை. இருந்த ஆஸ்பத்திரிகளும் ஒவ்வொன்றாக மூடப்படுகின்றன நம் ஆட்சியில்! அடுத்த தேர்தலில் நாம் வெற்றிபெற முடியுமா என்பது சந்தேகந்தான்!’**

காங்கிரசைத் தவிர வேறு எந்தக் கட்சி தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று கூக்குரல் எழுப்பிய கும்பலைச் சேர்ந்த டாக்டர் சுப்ரமண்யம் இப்போது சுருதியைக் குறைத்துக் கொண்டு சோகம் ததும்பக் கூறுகிறார் அடுத்த தேர்தலில் நாம் வெற்றிபெறுவது சந்தேகம்தான் என்று!

* * *

தென்னேட்டி விஸ்வநாதம், முன்னாள் அமைச்சர் பிரகாசம் காருவின் முக்கியநண்பர்! அவர்

ஆரிய வட்டாரத்தில் திராவிட முரசு!

27-2-49 ஞாயிறன்று பெரிதும் ஆரியர்கள் நிரம்பிய சிங்கப்பெருமாள் கோயிலில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. செங்கற்பட்டு தோழர் சின்னையா தலைமையில் போர்வாள் ஆசிரியர் மா இளஞ்செழியன் B. A. (Hons), மா. சு. சம்பந்தன், பாண்டியன், கோவிந்தராசன் முதலிய பலர் அறநிலைய மசோதா குறித்தும் திராவிடர் கழக இலட்சியங்களை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

கூறுகிறார் சட்டசபையில்:— "வழக்கம்போல இந்த ஆண்டும் பட்ஜட் வந்துவிட்டது! அது சரி! ஆனால் எங்களுடைய தொகுதிகளிலே மக்கள் எங்களுக்காக என்ன நன்மை செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால் என்ன பதில் சொல்வது என்றே எங்கட்குத் தெரியவில்லை — என்ன நன்மை செய்திருக்கிறோம் சொல்வதற்கு? இந்த பட்ஜட்டில்தான் என்ன இருக்கிறது மக்கள் நன்மைக்கு ஏற்றது?" "எங்கள் ஓட்டுகளை வாங்கிக்கொண்டு சட்டசபைக்குப் போனீர்களே, என்னய்யா செய்தீர்கள் நன்மை எங்களுக்காக?" என்று மக்கள் கேட்டால் சொல்வதற்கு ஒன்றுமே இல்லையே என்று சொல்லி கைகளைப் பிசைந்து கொள்கிறார் விஸ்வநாதம். ஆனால் நமக்கு நன்றாக நினைவிருக்கிறது "எங்களைத் தவிர வேறு கட்சி ஏது இந்த நாட்டிலே ஏழைகளுக்கு உழைக்க?" என்று இவர்கள் தேர்தல் கூட்டங்களிலே முழக்கமிட்ட காட்சி!

* * *

"ஏழைகளுக்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்லிக்கொண்டே ஏழைகளுக்கு கஷ்டங்களையும் தொந்தரவுகளையும்தான் நாம் தந்து வருகிறோம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது."—தோழியர் லட்சுமி பாரதி எம். எல். ஏ, பேசியிருக்கிறார் இதுபோல! "ஏழைகளுக்கு கஷ்டங்களையும் தொந்தரவுகளையும்தான் நாம் தந்து வருகிறோம்!" — எவ்வளவு மனம் துணிந்து கூறியிருக்கிறார் இலட்சுமி அம்மையார் இந்த மகத்தான உண்மையை ஏழைபங்காளர்கள் கட்சியாமே இவர்கள் கட்சி! சொன்னார்களே இவர்கள் அன்று! ஆனால்! இன்று— ...?

* * *

"எப்பொழுது கேட்டாலும், எதைக் கேட்டாலும், செய்கிறோம் செய்கிறோம் என்று சொல்கிறார்களே யன்றி நம்ம சர்க்கார் காரியத்தில் எதையும் செய்யக் காணோமே!"

—N. M. R. சுப்பராமனின் சட்டமன்றச் சொற்பொழிவு இது! எவ்வளவு அருமையான சர்டிபிகேட் தருகிறார் சுப்பராமன் "நம்ப சர்க்கா"ருக்கு!

* * *

"காந்திஜியின் கொள்கைகளுக்கு முற்றிலும் புறம்பான முறையிலேயே இந்த ஆண்டில் பட்ஜட் அமைக்கப் பட்டிருக்கிறது"

—வி. ஐ. முனிசாமிப் பிள்ளை! இந்த "சத்திய சோதனை"யும் சட்டசபையில் நடந்தது தான்!

* * *

சட்டசபை காங்கிரஸ்காரர்கள் இதுபோல "சத்திய சோதனை" செய்துகொண்டிருக்கிறார்கள் இப்போது! விரைவில் "சோதனை" முடிந்துவிடும்! முடிந்தால் சோதனையின் விளைவாகக் கிடைக்கும் முடிவு இதுவாகத்தான் இருக்கும்:—

"காங்கிரஸ் கட்சி உடனே கலைக்கப்பட்டாக வேண்டும்—நாடு, நலம் பெற வேண்டுமானால்!

ஏஜண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு பிரதிக்கு 12 அணா வீதம் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை:—

பழனி, வந்தவாசி, தஞ்சாவூர், துறையூர், பேரூர், பண்ருட்டி, குடியாத்தம், திருவள்ளூர், திருவத்திபுரம், சிவகங்கை பட்டுக்கோட்டை, திருப்பத்தூர் (Rd), நீடாமங்கலம், புவனகிரி, செஞ்சிமலை, மேட்டூர், கொழும்பு.

திண்டிவனத்தில்

திராவிடர் கழக மாபெரும் பொதுக்கூட்டம்

இடம்: **திண்டிவனம் காவேரிப் பாக்கம் பெரியார் திடல்**

காலம்:

12-3-49 சனிமாலை 6 மணி

சொற்பொழிவாளர்:—

தோழர் **இரா. நெடுஞ்செழியன் M,A.**
,, **மா. இளஞ்செழியன் B.A. (Hons)**

தோழர்கள் கருஞ்சட்டை அணிந்து வர வேண்டுகிறோம்.

ஒலிபெருக்கி உண்டு.

திராவிட கழகத்தார்.

(4—ம் பக்கம் தொடர்ச்சி)

இந்த பட்ஜட் தற்காலிக ஏற்பாடாக அல்ல நீண்டகாலத் திட்டமாகவே வகுக்கப்பட்டிருக்கிறது.

—பண்டித நேரு 4-3-49- அன்று புதுடில்லி வர்த்தக சங்கங்களின் தலைமைச் சங்கத்தில் பேசிய வாசகங்கள் இவை!

"இப்போது எந்தத் தொழிலையும் தேசிய மயமாக்குவதில்லை என்பது எங்களுடைய திடமான முடிவு. அதில் எத்தகைய ஐயப்பாட்டிற்கும் இடமில்லை"

—சர்தார் பட்டேலின் சென்னைச் சொற்பொழிவின் முக்கியமான பகுதி இது!

* * *

"போதும்! போதும்! மேலும் மேலும் எழுதவேண்டாம்! சர்க்காரின் சரணாகதி மனப்பான்மை எங்கட்கு மிக நன்றாகத் தெரிந்து விட்டது! நம்முடைய காங்கிரஸ் சர்க்காரா இப்படியெல்லாம் நடந்து கொள்கிறது! படிப்பதற்கே வெட்கமாக இருக்கிறது, போதும், மேலும் எழுதாதீர்கள்!" என்று வாசகர்கள் சொல்வது நம் காதில் நன்றாகவிழுகிறது' வாசகர்களுக்கு இந்த சரணாகதிப் படலத்தைப் படிப்பதற்கு வெட்கமாக இருக்கிறது என்றால் நமக்கும் [illegible]வதற்கு வெட்கமாகத்தான் இருக்கிறது—இதோடு நிறுத்திக்கொள்கிறோம்!...........

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

திகைத்து நின்றனர் ஒரு கணம்! தீர எண்ணிப் பார்த்தனர் மறு கணம்! "ஓஹோ! தொழிலாளர் தலைவர்கள் வெளியே இருப்பதால் தான் நாம் உடைக்க உடைக்க புதிய புதிய வேலைநிறுத்தங்கள் முளைத்த வண்ணம் உள்ளன, போட்டிச் சங்கங்கள் கண்டாலும் அவற்றில் சேர மறுக்கின்றனர் தொழிலாளர்கள், தலைவர்களை நெடுங்காலம் சிறையிலடைத்து வைப்போம், அப்போதுதான் தொழிலாளர்களின் கொட்டம் அடங்கும், முதலாளிகளின் சித்தமும் மகிழும்" என்ற முடிவுக்கு வந்தனர் சர்க்கார். காராக்கிருகப் படலத்தைக் கனவேகமாக ஆரம்பித்தனர். சிறைச்சாலை நிரம்பி வழிந்தது! இருக்கும் சிறைகள் போதவில்லை என்ற கூக்குரல் ஒவ்வொரு மாகாண சர்க்காரிடமிருந்தும் எழ ஆரம்பித்தது—அவ்வளவு அதிகமான பேர், தொழிலாளர் தலைவர்கள், தொழிற்சங்க காங்கிரஸ் நிர்வாகிகள், கம்யூனிஸ்ட் நண்பர்கள் இன்ன பிறர் சிறைச்சாலைக்குள்ளே கும்பல் கும்பலாகத் தள்ளப்பட்டனர். ஜனநாயகத்தை இவ்வண்ணம் சிறைச்சாலைக்குள் தள்ளி கதவை இழுத்துச் சாத்தினர் காங்கிரஸ் சர்க்கார், இப்படிச் செய்வதன்மூலமாகவாவது பண நாயகத்தின் மனம் மகிழ்ச்சி கொள்ளாதா, என்ற ஆசைகாரணமாக! ஆனால் சர்க்காரின் ஆசை சிறைச்சாலை அத்தியாயத்தின் மூலமும் நிறைவேறவில்லை—முதலாளித்வ வேதாளம் இந்தப் படலம் நிறைவேறிய பிறகும்கூட முருங்க மரத்திலிருந்து இறங்க மறுத்துவிட்டது! காங்கிரஸ் சர்க்காரைக் கட்டித் தழுவி கொஞ்சு மொழி கூற முடியாது, அது நடவாது என்று முதலாளித்வம் திட்ட வட்டமாகக் கூறிவிட்டது இந்தப் படலம் நிறைவேறிய காலத்திலும்!

பத்தாண்டு சாசனப் படலம்!

முதலாளித்துவம் இதுபோல ஒவ்வொரு கட்டத்திலும் முடுக்காகவே இருப்பதைக்கண்டு, சர்க்கார் மிகவும் கீழே இறங்கிவந்து, வெளிப்படையாகவே, வெட்கமின்றி, இனி பத்து ஆண்டு காலத்துக்கு முதலாளிகளுக்கு சிறு தொல்லையும் தருவதில்லை, அவர்களிடத்தில் இருக்கும் எந்தத் தொழிலையும் சிறு அளவுக்கும் தேசீயமயம் ஆக்குவதில்லை என்று, பிர்லாக்களுக்கு சத்தியம செய்து கொடுத்தனர், என்றாலும் பிர்லாக்கள் அசையவில்லை. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு தொழில்களை எங்களிடமிருந்து தட்டிப் பறிப்பதற்கான சூழ்ச்சியே இவ்வுரை என்று பேசினர்! பத்தாண்டு காலம நாங்கள் பாடுபட்டு தொழில்களை செழிக்க வைத்தால் பிறகு கொத்திக் கொண்டு போக எண்ணமோ இது செல்லுமோ என்று கவிதை வீசினர்! சர்க்காருக்கு சாகசம் தெரிகிறது ஆனால் சாகசமல்ல எங்கட்குத் தேவை, சரணாகதி என்று கூவினர்!

ஜான் மத்தாய் படலம்!

இந்த நேரத்திலேதான் நிதி அமைச்சர் ஜான் மத்தாய் புத்தாண்டு வரவுசெலவுத் திட்டத்தைத் தீட்டினார், அந்தத் திட்டத்திலே முதலாளிகளுக்கு சர்க்கார் சரணாகதி அடைந்துவிட்டது என்பதை அழுத்தந் திருத்தமாகவே குறிப்பிட்டிருக்கிறார் குறிப்பிட்டதோடில்லை முதலாளிகளுக்கு இதுவரை போடப்பட்டிருந்த முதலீட்டு வரியை அடியோடு ரத்து செய்துவிட்டார்! வருமான வரியைக் குறைத்துவிட்டார்! வேறு பற்பல வரிகளை பாதியாகவும் காலாகவும் குறுக்கிவிட்டார்! அதே நேரத்தில் ஏழைகளுக்கு, தொழிலாளர்களுக்கு புதுப்புது வரிகளைப் போட்டுவிட்டார்! கார்டு கவர் இவற்றின் விலையை ஏற்றிவிட்டார்! ஏழைகள் போடும் பாக்குக்கும் வரி விதித்துவிட்டார்! "பிர்லாக்களே, டாட்டாக்களே, டால்மியாக்களே, கோயங்காக்களே, தலால்களே, முதலாளிகளே, ஆலை அரசர்களே, வணிக வேந்தர்களே, தொழில் துறை மன்னர்களே, உங்களைத் தான்! சர்க்கார் உங்களிடம் முழு சரணாகதி அடைந்துவிட்டனர், இனியேனும் தயவு செய்யுங்கள், உற்பத்தியை பெருக்குங்கள்" என்று டாக்டர் மத்தாய் தன் பட்ஜெட் சொற்பொழிவின் மூலம் முதலாளிகட்குச் "சமரசத் தூது" விடுத்திருக்கிறார்!

சரணாகதிப் படலம்

பட்ஜெட் திட்டத்திலே காணப்படும் சரணாகதி சமிக்ஞையை அறிய முதலாளிகள் எங்கே மறந்துவிடப் போகிறார்களோ என்ற அச்சம் காரணமாக, நிதி அமைச்சர் ஜான் மத்தாய், முதல் அமைச்சர் பண்டிதநேரு, துணை முதல்வர் சர்தார் படேல் ஆகியோர் சர்க்கார் அடைந்துள்ள சரணாகதிநிலை—நமக்கு எழுதவே வெட்கமாக இருக்கிறது—வெளிப்படையாக, தைரியமாக, கேட்பவர் என்ன நினைப்பர் என்ற கவலையே அற்று, சட்டசபையிலும் வர்த்தக மன்றத்திலும பொதுக் கூட்டங்களிலும் மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

"உற்பத்தியைப் பெருக்கவேண்டுமானால் முதலாளிகளுக்கும் பணக்காரர்களுக்கும் சிறிது ஊக்கமும், தைரியமும், பயப்படவேண்டாம் என்ற வாக்குறுதியும் அளித்தாக வேண்டும். கைத்தொழில்களைத் தாமே எடுத்து நடத்த சர்க்காரிடம் போதிய பணமில்லை. எனவே முதலாளிகளுக்குத் தக்க வாக்குறுதி அளித்தால் தான் அவர்கள் தங்களிடமுள்ள பணத்தை தொழில்களில் ஈடுபடுத்த முன்வருவார்கள்..... **நாங்கள் முதலாளிகளுக்கு வெகுதூரம் விட்டுக் கொடுத்திருக்கிறோம்; அவர்கள் கேட்டபடி வாக்குறுதியும் அளித்திருக்கிறோம்**......நாட்டிலுள்ள கைத்தொழில்களை தேசீய மயமாக்குவது இப்போது சாத்தியமில்லை."

—நிதி அமைச்சர் மத்தாய் 5-3-49 அன்று டில்லி சட்டசபையில் பேசிய சொற்பொழிவின் ஒரு துண்டு இது!

"கைத்தொழில்களைப் பத்தாண்டு காலத்திற்கு தேசீயமயம் ஆக்குவதில்லை என்று நாங்கள் முன்னமே உறுதியுரை புகன்றிருக்கிறோம். அதனையே மீண்டும் கூற ஆசைப்படுகிறேன். பத்தாண்டு காலத்திற்குத் தேசீயமயம் ஆக்குவதில்லை என்றால் அதன்பிறகு கட்டாயம் ஆக்கத்தான் போகிறோம் என்றல்ல அர்த்தம், அதன்பிறகும்கூட ஆக்காமல் இருக்கலாம். இந்த நம் கொள்கையை ஆதாரமாகக் கொண்டுதான் இந்த ஆண்டு பட்ஜெட் வகுக்கப்பட்டிருக்கிறது."

(3-ம் பக்கம் பார்க்க)

சர்க்கார் அடைந்த சரணாகதி!

அகில உலகத்திலும் இன்றைய தினம் அமெரிக்கா என்ற பெயரைச் சொன்னால் கொஞ்சம் அச்சமும் பயமும், அதைவிட அதிகமான அளவுக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்படத்தான் செய்கிறது. அமெரிக்காவிடத்திலே அணுக்குண்டு இருக்கிறது—அது சர்வ வல்லமை பொருந்திய ஆயுதம்—ஓர் அணுக்குண்டை எடுத்து அநாயாசமாக வீசினால் ஒரு பிரமாண்டமான நகரம் முழுவதையும் கூட ஒரே விநாடியில் தூள்தூளாகச் சிதறடித்துவிடக்கூடிய ஆற்றல் அதற்கு உண்டு—ஆகவே பிற நாடுகளும் அணுக்குண்டை உற்பத்திசெய்கிற ஆற்றல் பெறுகிற வரையில் அமெரிக்காவுக்கு உலக மன்றத்தில் ஒரு தனி செல்வாக்கு இருக்கத்தான் செய்யும் என்பது மட்டுமல்ல இதற்குக் காரணம், அணுக்குண்டைவிட அதிக ஆற்றல் படைத்த **பணக்குண்டு** அமெரிக்காவிடம் இருக்கிறது, இதுதான் மிக முக்கியமான காரணம் அமெரிக்காவுக்கு இந்நாளில் உலகம்எங்கணும் இவ்வளவு 'பலம்' இருப்பதற்கு!

பணக்குண்டு உண்மையிலேயே வேறு எந்த ஆயுதத்தையும்விட ஆற்றல் மிகுந்தது என்பதை எவரும் மறுக்கமுடியாது. பணக்குண்டை கையில் ஏந்தியிருப்பவர்கள் சர்வ வல்லமை பொருந்திய சர்க்கார்களையும் "என்ன சேதி?" என்று கேட்கமுடியும்; ஊரை எல்லாம் ஆளும் பாராளுமன்றங்களையும் தாம் ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடும்படி செய்யமுடியும்; மன்னாதி மன்னர்களையும் தம் அடி பணிந்து கிடக்கும்படி செய்ய முடியும். அவர்கள் நினைத்தால் நாட்டில் உள்ள விலைவாசிகளை ஏற்ற முடியும், அவர்கள் நினைத்தால் நாட்டில் உள்ள விலைவாசிகளை இறக்கமுடியும். அவர்கள் எண்ணினால் எந்தப் பண்டத்தையும் எவ்வளவு மலிவான விலையிலும் விற்கமுடியும்—அவர்கள் எண்ணினால் எந்தப் பண்டத்தையும் எவ்வளவு அதிகமான விலையிலும் விற்க முடியும். அவர்கள் மனம் வைத்தால் தங்கள் நாட்டிற்கு உலக மன்றத்திலே உயர் இடம் பெற்றுத் தரமுடியும் அல்லது அவர்கள் சித்தம் களித்தால் தங்கள் நாட்டை நோக்கி பிற நாட்டாரெல்லாம் ஓடோடி வரும்படியான நிலையை உண்டுபண்ணிவிட முடியும். நாட்டிலே பசியையும் பஞ்சத்தையும் பட்டினியையும் உண்டு பண்ணி அதன்மூலம் சர்க்காரைத் திகைக்கவைக்கும் ஆற்றலும் அவர்களுக்குண்டு; உணவுப் பொருளை ஏராளமாகக் குவித்து, பஞ்சத்தைப் போக்கி, நாட்டிலே இன்பத்தை உண்டுபண்ணும் திறமையும் அவர்களுக்குண்டு. பணக்குண்டு படைத்தவர்கள், ஆலை அரசர்கள், வியாபாரக் கோமான்கள், வணிக வேந்தர்கள், தலால்கள் பிர்லாக்கள் டால்மியாக்கள் டாடாக்கள், சட்ட சபைகளை தங்கள் வணிக வளர்ச்சி நிலையங்களாகவும், பிரதம மந்திரிகளை தங்கள் கமிஷன் ஏஜண்டுகளாகவும், சர்க்கார் மாளிகைகளை தங்கள் சிங்காரத் தோட்டங்களாகவும் ஆக்கிக்கொண்ட கதை உலக வரலாற்றில் ஏராளம். அதிலும் தொழில் வளர்ச்சி மிகுந்துள்ள இந்தக் காலத்தில், நாட்டின் கடிவாளம், பெரிய முதலாளிகளின் 'பிடி'யிலே சிக்கிக் கொண்டுள்ள காட்சி பல நாடுகளிலும் இன்றைய தினம் சர்வ சாதாரணமாகக் காணப் படுவதுதான். பலம் பொருந்திய பணக்குண்டு அவர்கள் கரத்திலே இருக்கிறது, அதனை வீசினால் எந்தக் கோட்டையும் சரியாமல் இருப்பதில்லை, வீசுகின்றனர்—நாட்டின் உயிர்நாடியைக் கைப்பற்றிவிடுகின்றனர். மக்களுக்கு அத்தியாவசியமான பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப் பொருள்களின்மீது தங்கள் ஆதிக்கத்தை அவர்கள் முதலில் ஏற்படுத்திக் கொண்டு விடுகின்றனர், அதிலிருந்து படிப்படியாக, நாட்டின் பொருளாதார இயந்திரம் முழுவதையும் தங்கள் ஆட்சியின்கீழ் கொண்டுவந்து விடுகின்றனர். பொருளாதார இயந்திரம் அவர்கள் கைக்கு மாறிவிட்ட பிறகு அரசியல் ஆதிக்கம் எவரிடத்திலே இருந்தால்தான் என்ன—பொருளாதார இயந்திரத்தின்மீது சுழலும் ஒரு சிறு அச்சுதானே அரசியல்!

பஞ்சாலைகள், பருத்தி ஆலைகள், நிலக்கரி, இரும்பு தங்கம் வெள்ளி சுரங்கங்கள், இரும்பு எஃகு தொழிற்சாலைகள், இரயில்வேக்கள், வானூர்திகள், பாங்குகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், மூலப் பொருள்களின் உற்பத்தி நிலையங்கள் ஆகிய இவையும், இவை போன்ற ஏனைய பல பணத்தோட்டங்களும் கொழுத்த முதலாளிகளின் கரத்திலே சிக்கிவிட்டால், பிறகு, நாடு, அவர்கள் சொல்படி கேட்டுத்தானே ஆகவேண்டும்?

முதலாளிகளுக்கு நாட்டின் பொருளாதார வாழ்விலே உள்ள இந்த அபாரமான செல்வாக்கைக் குறைப்பதற்கு, சர்க்கார், ஏதேனும் முயற்சி செய்ய ஆரம்பித்தால், உடனே முதலாளிகள் நாட்டுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற பொருள்களை உற்பத்தி செய்ய மறுப்பார்கள், தங்களிடத்திலே ஏராளமாகக் குவிந்து கிடக்கும் செல்வத்தை இருக்கும் எந்தத் தொழிலிலும் போடாமல், புதிய தொழிலையும் துவக்காமல் முடக்கிவைப்பார்கள், அதனாலே நாட்டில் பண்டங்களின் உற்பத்தி வெகுவாகக் குறைந்து விடும், குறைந்தால் விலைவாசிகள் விஷம்போல் ஏறும், பண்டங்களுக்கு மார்க்கட்டில் தேவை அதிகமாக இருந்து உற்பத்தி குறைவாக இருந்தால் விலை ஏறுவது இயற்கை, எந்தப் பொருளும் தேவையான அளவுக்குக் கிடைக்கவில்லை என்று தெரிந்ததும், மக்கள், அதிக விலை கொடுத்தாவது, தேவைப்பட்ட பொருளை, கிடைக்கும் போதே ஏராளமாக வாங்கிவைத்துக் கொள்ளவேண்டும் என்றுதான் சாதாரணமாக ஆசைப்படுவார்கள், விலைவாசிகள் இதுபோல ஏறுமானால் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகமாகிறது, செலவு அதிகமானால் அதிக சம்பளம் தேவை என்ற கூச்சல் எங்கும் கேட்கிறது, வேலை நிறுத்தம் சர்க்கார் அலுவலர்கள் உட்பட எல்

[11-ம் பக்கம் பார்க்க]

★ போர்வாள் ★

12—3—49 சனிக்கிழமை

பேய் அல்ல! கைகாட்டி!

"பேயும் உறங்கும் நேரம்" என்பார்கள் அத்தகைய நள்ளிரவு; மை இருட்டு; காட்டு வழி; கரடு முரடான பாதை; நட்சத்திரங்கள் மினுக் மினுக் என்று சுடர்வீசும் சிற்றொளியையும் தடுத்துவிடும் அடர்ந்த மரங்கள் செறிந்து மிடைந்து துதைந்து நிற்கும் பயங்கரக் காட்சி; ஆந்தையின் அலறல், கோட்டானின் சப்தம், நரிகளின் ஊளை, மரநாய்களின் உறுமல்; இவ்வளவுக்குமிடையே ஓயாத பெரு மழை. அவனோ சிறுவன். துணை எவருமின்றி, தன்னந் தனியாக, இருட்டு நேரத்தில், மனதை மருட்டும் இத்தகு சூழ்நிலையில், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, அச்சம் உள்ளத்தை உலுக்க உலுக்க, கண்கள் நாலாபுறமும் மிரண்டு மிரண்டு பார்க்க, கைகள் கால்கள் உதற, அவன் பயந்து பதறி, மெல்ல, அடிமேல் அடிவைத்து நடந்து செல்கிறான். எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும் அடர்ந்த இருள். எப்புறமும் பாராது செல்லவோ முடியாது—பாதை ஒழுங்கானதல்ல, மேடு பள்ளங்கள் நிறைந்தது. கண்களைத் திறந்துகொண்டு சென்றாலோ எங்கும் நிறைந்துள்ள அந்தகாரம் மனதை மருட்டுகிறது. கண்களை மூடிக்கொண்டாலோ பயம் மேலும் அதிகமாகி ஏதேதோ பயங்கரக் காட்சிகள் தோன்றுகின்றன. இந்த நிலையில் ஏதோ, எப்படியோ நடந்து கொண்டிருக்கிறான் சிறுவன். ஒருமுறை நரியொன்று ஊளையிட்டது. பயந்து கண்களை இறுக மூடிக்கொண்டான். மீண்டும் கண்களைத் திறந்தபோது, தொலைவில், நெடுந்தொலைவில் ஏதோ ஓர் உருவம் தோன்றக் கண்டான். உருவத்தை உற்றுப் பார்த்தான். அது, ஆகாயத்தில் மிதந்து நிற்பதுபோல் காணப்பட்டது. அவன் பார்த்துக்கொண்டே இருந்தான். உருவத்திற்கு கைகள் கால்கள் உடல் எல்லாம் இருப்பது ஒவ்வொன்றாகத் தெரியலாயிற்று. அவன் கண்களை நன்றாகக் கசக்கிக்கொண்டு மீண்டும் அகண்ட தன் இருவிழிகளையும் அந்த "விண்ணில் மிதக்கும் விசித்திர உருவம்" தோன்றிய திசைமீது செலுத்தினான் — "ஐயமில்லை, பேய், பேய்!" என்று கூவினான்! பேயைப் பற்றியும், பூதத்தைப் பற்றியும், பிசாசுகளைப் பற்றியும், காத்தான் முனியன் காட்டேரிகளைப் பற்றியும் அவன் பல சமயங்களில் கேள்விப்பட்டிருந்த பல பயங்கரக் கதைகள் அப்போது அவன் முன் தோன்றி உயிர்பெற்று நடமாடலாயின. எனவே அவனுடைய அச்சம் அதிகரிக்கலாயிற்று. வந்த வழியே ஓடிவிடலாமா என்றெண்ணினான். கண்களை மூடிக்கொண்டு அங்கங்கே படுத்துவிடலாமா என்று யோசித்தான், குப்புறப்படுத்துக் கொண்டு கோவெனக்கதறி அழ வேண்டும் போலவும் அவனுக்குத் தோன்றிற்று. ஆனால் இறுதியில், "வருவது வரட்டும்! பேய் இருக்கும் வழியே போய்த்தான் தீர்வது!" என்று முடிவு கட்டிக் கொண்டான். பயந்து பயந்து நடக்கத் தொடங்கினான். 'பேய்' இருக்கும் இடத்திற்கு அருகே நெருங்க நெருங்க, பேய், தன்னைக் கையைப் பிடித்து இழுப்பதுபோலவும், ஓங்கி ஓர் அறை அறைவது போலவும், பேய் உலகத்திற்குத் தன்னை இழுத்துச் செல்வதுபோலவும் ஏதேதோ எண்ணி நடுங்கலானான்—என்றாலும் ஏதோ ஒருவகையான தைரியம், என்னதான் நடக்கும் பார்ப்போம் என்ற அசட்டுத் துணிச்சல் அவனுக்கு இப்போது ஏற்பட்டுவிட்டது—எனவே நடப்பதை அவன் நிறுத்தவில்லை. 'பேய்' இடத்திற்கு கொஞ்சம் தொலைவில் வந்ததுமே கண்களை இறுக மூடிக்கொண்டு, தலையைக் குப்புறக் கவிழ்த்துக்கொண்டு, அவனுக்குத் தெரிந்த தெய்வங்களின் பெயர்களை எல்லாம் சொல்லி பிரார்த்தனை செய்துகொண்டு, குனிந்ததலை குனிந்தபடி, மூடிய கண்கள் மூடியபடி, சிறுவன் மடமடவென நடக்கலானான். ஆயிற்று, "பேய்" இருக்கும் இடத்திற்கு 20 கெஜம் தூரத்தில் வந்துவிட்டான், இன்னும் 10 கெஜம் தான், இன்னும் 5 கெஜம்தான், இதோ அந்த இடத்திற்கே வந்துவிட்டான். இதோ அதைத் தாண்டியும் நான்கைந்தடி வைத்துவிட்டான், அப்போதுதான் அவனுக்கு, பேய் இருக்கும் இடத்திற்கு இன்னும் எவ்வளவு தொலைவு இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்போல் தோன்றிற்று, பயந்து பயந்து கண்களை மெள்ளத் திறந்து சற்றே திரும்பிப் பார்த்தான்—பார்த்ததும் கடகடவெனச் சிரித்துவிட்டான்!—அவன் இதுவரை பேய் என்றெண்ணி பெருங்கலக்கமடையக் காரணமாயிருந்தது 'பேய்' அல்ல கைகாட்டிமரம்! அந்த இடத்திலே பாதை மூன்றாகப் பிரிகிறது. பிரியும் மூன்று பாதைகளும் மூவேறு திசைகளிலே சென்று மூவேறு கிராமங்களை அடைகின்றன. எந்தப் பாதை எந்த ஊருக்குச் செல்கிறது என்பதை அவ்வழியே செல்பவர்க்கு அறிவிப்பதற்காக, அந்த 'முச்சந்தி'யில் எழுப்பப் பட்டுள்ளது அந்தக் கைகாட்டிமரம்! அதற்கு மூன்று 'கரங்கள்' உள்ளன—பிரியும் மூன்று பாதைகளையும் சுட்டிக்காட்டிய வண்ணம்! அவற்றைத்தான் பேயின் கரங்கள் என்றெண்ணி பயந்திருக்கிறான் சிறுவன். மூன்று கரங்களையும் தாங்கிக்கொண்டு நீண்ட மரம் நிற்கிறது — அதனைத்தான் கால்கள் என்றெண்ணி சிறுவன் அஞ்சி

நடுங்கியிருக்கிறான். அவனுக்காகவும் அவன்போன்ற பலருடைய சவுகரியத்திற்காகவும் எழுப்பப்பட்டுள்ள கைகாட்டி மரமேதான் அவனுடைய மனக்குழப்பம், அச்சம், இருள், பயங்கரமான சூழ்நிலை, ஆகியவற்றின் காரணமாக அவனுக்குப் பேயாகத் தோன்றி, அவன் மனதை ஆலைக் கரும்பாகக் கசக்கிப் பிழிந்திருக்கிறது — அவனும் அனல்பட்ட புழுவாகத் துடித்திருக்கிறான், வேங்கையைக் கண்ட மான்போல நடுங்கியிருக்கிறான்! ஆனால், அருகே நெருங்கி, கண்களைத் திறந்து, அதனை ஒருமுறை பார்த்ததும், அவன் அச்சம் முழுவதும் பறந்துவிட்டது—சிரிப்புதான் பிறந்தது அவனுக்கு! தன்னுடைய மடமை எவ்வளவு அதிகமாக இருந்திருக்கிறது என்பதை எண்ணும்போது, அவனுக்கு, சிரிப்பு தோன்றாமலா இருக்கும்!!

* * *

ஏதேனும் ஒரு பொருள் அல்லது ஒரு நிகழ்ச்சியைக் குறித்து, யாரேனும் ஒருவர் அல்லது பலர், ஏதாவது ஒரு கருத்தை அல்லது தம் மதிப்பீட்டைத் தருவார்களானால், அந்தக் கருத்து அல்லது மதிப்பீடு, மதிப்பிடப்பட்ட பொருளின் இயல்பு அல்லது வடிவம் அல்லது பண்பைப் பொறுத்துமட்டும் அமைவதில்லை; மதிப்பிடுபவரின் இயல்பு, தன்மை, சூழ்நிலையையும் பொறுத்துத்தான் அமைகிறது. நீலநிற வானம் ஒன்றுதான் உலகில் உண்டு—ஆனால் அதே வானம் மஞ்சள் வானமாகிறது காமாலைக் கண்ணனுக்கு. கருப்பு வானமாகிறது கருப்புக் கண்ணாடி அணிந்திருப்பவனுக்கு! வானம் என்பதே பொய், அப்படி ஒன்று கிடையாது, அது வெறும் உருவெளித் தோற்றம் என்கிறான் விஞ்ஞானி, ஆனால் மதவாதியோ நீலநிற வானமடி அது நிர்மலனின் தேகமடி என்று கவி பாடுகிறான். நீல வானம் நமக்கெல்லாம் வெறும் நீலவானம்தான்! ஆனால் இனிய தமிழ் பாடி இவ்வையகத்தை வளர்க்கும் செந்தமிழ்ப் பாவலருக்கோ, அது, சங்க இலக்கியத்தின் அகன்ற மாட்சிமையாகத் தோன்றுகிறது! கம்பங் கூழைக் கண்டால் சொர்க்க புரியைக்கண்டேன் என்று களிப்புடன் கூவுகிறான் சொக்கன், சொக்கன் ஓர் உழவன்! ஆனால் அதே சொக்கனின் பண்ணை எஜமானர் பஞ்சாபகேச அய்யருக்கோ, கூழ் குப்பையிலே ஊற்றப்பட வேண்டிய பண்டமாகத் தோன்றுகிறது — பாலையும் பழத்தையும் பஞ்சாமிருதத்தையும் கண்டு கண்டு பழக்கப்பட்ட சீமான் அவர்! ஆகவே பொருள் ஒன்றானாலும், அந்தப் பொருளைக் காண்பவர்தம் நிலைமைக்கு ஏற்ப, காண்பவரின் கருத்தும் மாறுபடுகிறது. ஆகவே ஒரு பொருளின் தன்மையை சிலரோ பலரோ சரியாக உணரவில்லையானால், அதற்குக் காரணம், அவர்கள் வேண்டுமென்றே அதனைச் சரியாக உணராமல் இருக்கிறார்கள் என்பதல்ல, அவர்களுடைய நிலைமை அத்தகைய தவறான கருத்தை அவர்கட்கு ஊட்டுகிறது என்பதுதான். உடலுக்கு வலுவூட்டும் கம்பங்கூழ் குப்பையிற் போகவேண்டிய பண்டமாக பஞ்சாபகேசருக்குத் தோன்றுவதற்குக் காரணம் அவருடைய நிலைமை! அவர் சீமான்! ஆகவே அப்படித்தான் தோன்றும். சொக்கன் உழவன்! ஆகவே அவனுக்கு அதே பண்டம் பஞ்சாமிர்தமாகிறது. ஒரே பொருள் குப்பைப் பண்டமாக ஒருவருக்கும் பஞ்சாமிர்தமாக வேறொருவருக்கும் தோன்றுகிறது — நிலைமை அவ்வளவு மகத்தான வேறுபாட்டை உண்டுபண்ணுகிறது மக்களின் மனநிலையிலே! சிறுவன், கைகாட்டிமரத்தைப் பேய் என்றெண்ணி சித்தம் சோர்ந்து போனான்! காரணம் இருட்டு நேரத்திலே மனதை மருட்டும் பாதையிலே குருட்டு மனிதன்போல் அவன் சென்றான்! உள்ளத்திலே இருந்த மருள், வெளியே இருந்த இருள் ஆகிய இவற்றின் காரணமாக தொலைவிலே இருந்த பொருள், தன் வடிவம் மாறித் தென்பட்டது அவனுக்கு! அது அந்த கைகாட்டியின் குற்றமல்ல! கைகாட்டியைப் பேயாக எண்ணி மருண்ட அந்தச் சிறுமகனின் குற்றமுமல்ல! அவனுடைய நிலைமையின் குற்றம்! பட்டப்பகலாயிருந்து, பாதையும் ஒழுங்காகவிருந்து, துணைக்கும் தோழர்கள் கூட இருந்து, காட்டுப் பிராணிகளின் கூச்சலும் அடர்ந்த மரங்களின் அச்சமும் இல்லாமலிருந்து, அவனும் கொஞ்சம் பெரியவனாக இருந்திருந்தால் அவன் அப்படிப் பிழைபட எண்ணி அச்சத்தின் வயத்தனாகி நெஞ்சுலர்ந்துபோயிருப்பானா! குற்றம் சூழ்நிலையின் மீதே செலுத்தப்பட வேண்டும்! அவன்மீது அல்ல!!

* * *

தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள், இன்றைய தினம், ஏறத்தாழ, கைகாட்டியைப் பேய் என எண்ணி மருண்ட அந்தச் சிறுவனின் நிலையிலேயே உள்ளனர். குற்றம் அவர்களுடையது அல்ல, அவர்கள் இருக்கும் வட்டாரத்தின் நிலைமையினுடையது!

திராவிடர் கழகம் தமிழகத்தின் எழுச்சிக் குரல்! ஆயிரமாயிரம் இளங்காளைகளின் இருதய கீதம்! பொதுவுடமை கோரும் பாட்டாளி மக்களின் தனி உடமை, திராவிடர் கழகம்! கழகத்தின் முழு இலட்சியமும் தென்னாட்டு மக்கள் சமுதாயத்தில் இன்பம் தழைக்கவேண்டும் என்பதுதான். இந்த இலட்சிய புரியை அடைவதற்கான நீண்ட, அரிய, ஆபத்தான, பலரும் மேற்கொள்ள அஞ்சுகின்ற பயணத்தைத்தான் அது மேற்கொண்டிருக்கிறது. அந்தப்பயணத்தை ஒரு சிலராவது, ஊருக்கும் உலகத்திற்கும் அஞ்சாமல் மேற்கொண்டு தீரவேண்டியது, மக்கள் சமுதாயத்தின் எதிர்கால நல் வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியம் என்பதை முதன் முதல் எடுத்துக் காட்டியவர்தான், எடுத்துக்காட்டியதோடு நில்லாமல் அத்தகைய மன உறுதி படைத்த மாவீரர்களை ஆயிரமாயிரமாகத் திரட்டி ஒரு பகுத்தறிவுப் பட்டாளத்தை உருவாக்கியவர்தான், உருவாக்கியதோடில்லாமல் அந்தப் பட்டாளத்திற்கு திராவிட சமுதாய மறுமலர்ச்சி என்கிற உன்னத நோக்கம் ஒன்றைத் தவிர சட்டசபை, பட்டம் பதவி, சிறு சலுகை, அமைச்சுத் தவிசு ஆகிய சில்லறைகளைப்பற்றி சிறிதும் கவலையற்ற சிறந்த சீரிய, அற்புதமான குறிக்கோள் அமையும்படி செய்தவர்தான், செய்ததோடன்றி அத்தகு மாவீரர் பட்டாளத்தை தலைமைதாங்கி நடத்திச் செல்பவர்தான் பெரியார் இராமசாமி! அவர்தம் அருமைத் தளபதிதான் அறிஞர் அண்ணாதுரை! இவ்விருவர்தம் சுண்டுவிரல் அசைந்தாலும் தங்கள் வாழ்க்கையை எத்தகைய [illegible] வேண்டுமானாலும் அர்ப்பணிக்கத்

தயாராய் இருப்பவர்களே கழகத் தோழர்கள். ஜாதி பேதமற்ற சமுதாயம் அமையவேண்டும், பொருளாதார பேதமற்ற மக்கள் வாழ்க்கை உருவாக வேண்டும், வேற்று நாட்டாரின்—அவர்கள் ஆங்கிலராயினும் சரியே, வடநாட்டு வணிக வேந்தர்களாயினும் சரியே, அன்னாரின் சுரண்டல் சிறிதுமற்ற அரசியல் அமைப்பு ஏற்பட்டாக வேண்டும், மதத்துறையில் மக்கள் மனதில் படிந்துள்ள கறை முற்றிலும் மறையவேண்டும் என்னும் இவ்வளவுதான் திராவிடர் கழக இலட்சியங்கள். இந்த இலட்சிய நிறைவேற்றத்திற்காகத்தான் கழகம் பல்வேறு திட்டங்களை வகுத்து பல துறைகளிலும் பல முறைகள் மூலம் பல அரிய பணிகளை ஓயாது நிகழ்த்திவருகிறது. இந்த சமுதாய சீர் அமைப்புத் தொண்டுக்கு கேடு விளைப்பவர்களை மட்டும் அது எதிர்க்கிறது, அந்தப் பணியை எதிர்த்துப் போர்முகாம் அமைப்பவர்களுடன் மட்டுமே அது சமர் புரிகிறது. இவர் தவிர பிறரெல்லாம்—அவர்கள் எக்கட்சியினராயினும் ஆக, அன்றி எந்த இனத்தவராயினும் ஆக—அதன் நண்பர்களே! தன் மக்கள் மறுமலர்ச்சித் தொண்டுக்கு ஊறுதேடுவாரைத்தான் அது பகைக்குமே தவிர மற்றபடி காங்கிரசாரிடம் அதற்குக் காழ்ப்புமில்லை; காங்கிரஸ் இயக்கத்திடம் அதற்குப் பகையுமில்லை. என்றாலும் காங்கிரஸ் வட்டாரம் சற்றேனும் இதனை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள் என்பதற்காகவோ, காங்கிரஸ் சர்க்கார் கொண்டு வருகிறார்கள் என்பதற்காகவோ, நாட்டு மக்கள் நன்மைக்கான எந்த நல்ல திட்டத்தையும் கழகம் எதிர்த்ததில்லை. மதுவிலக்கு, ஜமீன் ஒழிப்பு, குதிரைப் பந்தய ஒழிப்பு, சிறுவர் புகை பிடிப்புத் தடை, இருதாரமண ஒழிப்பு மசோதா, திருக்குறள் கட்டாய பாடம் முதலிய திட்டங்களை காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்தபோது, "கொண்டுவந்திருப்பது காங்கிரஸ்காரர்களா! அப்படியானால் வரிந்துகட்டிக்கொண்டு தாக்கு அத்திட்டங்களை" என்று கழகத்தவர் சீறிப் பாய்ந்தனரில்லை. சிரித்த முகத்தோடு சர்க்காருக்கு தம் சிறந்த ஆதரவை அளித்தனர். காங்கிரஸ் சர்க்காரின் இனாம் ஒழிப்பு போன்ற சில திட்டங்களுக்கு வைதீகர்களின் எதிர்ப்பு மலையென எழுந்தபோது, கழகம், தன் தோள்வலியையும் வாள்வலியையும் சர்க்காருக்கு ஆதரவு தேடுவதிலேயே செலவிட்டிருக்கிறது. இப்போதும்தான் என்ன? காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்துள்ள அறநிலையத் திருத்த மசோதாவுக்கு காங்கிரஸ் வட்டாரத்திற்குள்ளிருந்துகொண்டே வஞ்சக வரதாச்சாரிகள் வேட்டு வைக்கின்றனர், வைதிக வைத்தியநாதர்கள் வளை தோண்டுகின்றனர், ஆனாலும் காங்கிரசிற்கு பகைமைக் கட்சி என்று காங்கிரஸ்காரர்களால் கருதப்படும் திராவிடர் கழகம்தான் கட்சி வேற்றுமையைச் சிறிதும் கருதாது, சர்க்காருக்கு, பக்கபலமாக இருந்து வேதிய புரியினரின் வஞ்சகக் கணைகள் சர்க்கார்மீது விழாவண்ணம் சாமர்த்தியமாக அவர்களைக் காப்பாற்றிவருகிறது. கட்டாய இந்தித் திட்டத்தைப் போல தமிழகத்தின் மாண்புக்கு மாசு தேடும் மட்டரகமான திட்டங்களை கழகம் மட்டும் தட்டுகிறதே தவிர மற்றபடி, சர்க்கார் கொண்டுவரும் சிறந்த திட்டங்கள் அத்தனையையும், கழகம், அரை மனதோடு அல்ல, ஏனோதானோ என்ற அசட்டு சுபாவத்தோடு அல்ல, ஏதோ தலைவர்கள் ஆதரிக்கச் சொல்கிறார்கள்—ஆதரிப்போம் என்ற குறை மனப்போக்கோடு அல்ல, முழுமனதோடு, பரிபூரணத் திருப்தியோடு, மகிழ்ச்சியோடு, ஆதரித்து வருகிறது.

திராவிடர் கழகம், மற்ற பல கட்சிகளைப்போல சாதாரண அரசியல் சூதாட்ட மன்றமாக இருந்தால் வேற்றுக் கட்சியினர் கொண்டுவரும் திட்டங்களை இதுபோல மகிழ்ச்சியோடு ஆதரித்து பிரசாரமும் புரியாது. ஏனெனில் ஆளுங்கட்சியினரின் திட்டங்களை அதன் எதிர்ப்புக் கட்சியினர் ஆதரித்துப் பிரசாரமும் புரிகின்றனர் என்றால் அது ஆளுங்கட்சியினரின் மதிப்பையே மக்கள் மன்றத்தில் அதிகரிக்கும். "பார்த்தீர்களா எங்கள் கட்சியின் சிறப்பை! எங்களை எதிர்ப்பதற்காகவே இருக்கிற கட்சியினர் கூட எங்கள் திட்டத்தை ஆதரிக்கிறார்கள்! எங்கள் தொண்டின் பெருமையே பெருமை! அருமையே அருமை! ஆகவே மஹாஜனங்களே எங்களுக்கே ஓட்டுப் போடுங்கள்." என்று ஆளுங்கட்சியினர், பிறிதோர் நாள், தேர்தலில் மீண்டும் மக்களைச் சந்திக்கும் நேரம் வரும்போது எளிதில் சொல்லிக்கொள்ளவும், மக்களின் ஆதரவைத் தங்கள் பக்கம் திரட்டிக்கொள்ளவுமே இது பயன்படும். தங்கள் கட்சியின் செல்வாக்கு இதுபோல வேறு கட்சியினரின் — அதுவும் இதுபோது ஆளுங் கட்சியாக இருப்பவர்களின் பெயரையும் புகழையும் வளர்க்கப் பயன்படுவதை சாதாரணமாக எந்த அரசியல் கட்சியும் சகிக்காது. ஆனால் திராவிடர் கழகம் சகிக்கிறது! சகிப்பதுமட்டுமல்ல, இத்தகைய பணியை மீண்டும் மீண்டும் மகிழ்ச்சியோடு புரிகிறது. காரணம், திராவிடர் கழகம் ஒரு சாதாரண அரசியல் கட்சியல்ல. எதைச் செய்தால், எத்தகைய வேஷம் போட்டால், யாராரை ஆதரித்தால், எவரெவரைக் கவிழ்த்தால், எந்தெந்த சகாக்களோடு எப்படி எப்படி ஜோடி சேர்ந்தால், எவரெவரைத் தட்டிக்கொடுத்து யார் யாருக்கு "சபாஷ்! கரகோஷம்!" செய்தால், என்னென்ன அதிர்வேட்டுக்களைப் போட்டு என்னென்ன "இந்திர ஜால"ங்களைப் புரிந்தால், அடுத்த தேர்தலின் மூலம், ஆட்சிப் பீடம் தமதாகும் என்னும் "ராஜதந்திரக்" கணக்கை அதுபோட்டுப் பார்ப்பதில்லை. "இந்த சர்க்கார் கொண்டுவரும் இந்த திட்டம் நல்லதுதான்! என்றாலும் இதை எதிர்த்தால்தான் நமக்கு அடுத்த தேர்தலில் ஓட்டு கிடைக்கும் ஆகவே எதிர்ப்போம், புரட்சிப் புயல் எழுப்புவோம், சர்க்கார் மாளிகை சரியட்டும்" என்று பிற கட்சிகளைப் போல, கழகம், எந்தப் பிரச்சினையையும் தேர்தல் கண்ணாடிமூலமாகவே பார்க்கும் துர்ப் பாக்கிய வழக்கத்தைக் கொண்டதல்ல. கழகத்தின் கவலையும், சமுதாயம் சீர்திருத்தப்படவேண்டும் என்பதுதானே தவிர, தமது கட்சியினர் சட்டமன்றத்தில் நுழைந்தாக வேண்டும் என்பதல்ல. ஒரே வார்த்தையில் சொல்வதானால், திராவிடர் கழகம், மக்கட் சமுதாயம் எனும் கழனியை பகுத்தறிவு எனும் கலப்பைகொண்டு உழுது, தூய பணி எனும் வித்தினைத் தூவி, பழமைப்பித்து எனும் களைகளைக்

கல்லியெறிந்து, கால முன்னேற்றம் எனும் பருவமழையின் துணையாலே, புதுவாழ்வு எனும் நெற்பயிரை விளையச் செய்யும் உழவனே தவிர, தேர்தல் வலை விரித்து பதவிப் பூச்சிகளைப் பறித்து உண்ணும் வஞ்சக நினைப்புடைய சிலந்தி அல்ல! எனவேதான் கழகம், சமுதாய சீர்திருத்தப் பணியை யார் செய்த போதிலும் அவர்களை வாழ்த்த, பாராட்ட, தட்டிக் கொடுக்க, தேவையானல் தோள் கொடுக்க, ஆபத்தில் கைகொடுத்துதவச் சிறிதும் தயங்குவதில்லை. தாங்கள், இனும் ஒழிப்பு, ஜமீன் ஒழிப்பு, மடாலய ஊழல் ஒழிப்பு போன்ற காங்கிரஸ் சர்க்காரின் பல முற்போக்குத் திட்டங்களை ஆதரிப்பது, காங்கிரஸ்காரர்களுக்குத்தானே அடுத்த தேர்தலில் அதிகமான ஓட்டுகளை வாங்கித் தரும் என்பது பற்றி துளியும் எண்ணிப்பாராமல், அவர்களுக்கு, தங்கள் தளராத ஆதரவை சமயம் நேரும் போதெல்லாம் தாராளமாகத் தந்து வருகின்றனரே திராவிடக் கழகத்தினர், அதன் காரணமும் இதுதான்! மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயம் தோன்றும்! மனதில் கழகத்தவரை தேர்தல் குளவி கொட்டினல்தானே, மாற்றுக் கட்சியினரின் திட்டங்களை ஆதரிக்க கழகத்தவர் அஞ்சவேண்டும்! சமுதாயம் மறுமலர்ச்சி பெற வேண்டும், சமுதாயத்தில் சழக்கர்கள் செய்துவைத்துள்ள சூதான ஏற்பாடுகள் யாவும் சுக்கு நூறாக வேண்டும் என்ற எண்ணம் ஒன்றையே தம் இருதய கீதமாகக் கொண்டிருப்பவர்களுக்கு வேறு எதைப்பற்றித்தான் ஏன் கவலை பிறக்கப் போகிறது?

திராவிடர் கழகம் இவ்வளவுதூய உள்ளத்தோடு, எக கட்சியினர் மீதும் பகைமை இன்றி, எந்த வட்டாரத்தவர்மீதும் காழ்ப்பு இன்றி, எந்த அரசியல் முகாமில் தங்கியிருப்பவர்மீதும் கோபமோ கோதிப்போ கொள்ளாமல், எவர் மீதும் சினந்து சீறுமல், சீறிப்பாயாமல், அமைதியாக ஒழுங்காக, என் கடன் மக்கட்பணி செய்து கிடப்பதே என்னும் மொழியையே தன் வாழ்க்கை வழியாகக் கொண்டு நற்பணி புரிந்து வருகிறது—என்ரும் காங்கிரஸ்காரர்களோ, திராவிடர் கழகத்தைப் பார்த்து சிலர் அஞ்சி நடுங்குகின்றனர். சிலர் “அது கழகமல்ல கருப்பூதம்! பூதம்!” என்று கூறுகின்றனர். ஏனோ பாபம் அவர்களுக்கு இவ்வளவு அச்சம்? சிறுவன், இருண்ட சூழ்நிலையில் இருந்த காரணத்தால் மருண்டுபோய் தொலைவில் இருந்த கைகாட்டியை, பேயோ பிசாசோ பூதமோ ஏதோ என்றெண்ணி நடுங்கியதைப்போல இவர்களும் திராவிடர் கழகத்தை கிட்ட நெருங்கிப் பாராத காரணத்தால், இவர்கள் உள்ளத்தை ‘கழகத்தின் மீது காழ்ப்பு’ எனும் இருள் கவ்விக் கொண்டுள்ள காரணத்தால, இடையே ‘தூரம்’ எனும் ஒரு பாவி கூடாரம் அடித்துவிட்ட காரணத்தால், நம் நோக்கத்தையும் நிலையையும் நினைப்பையும் சரியாக உணர்ந்து பார்க்கமுடியாத அரசியல் முகாம் ஒன்றில் இவர்கள் இருக்கின்ற அந்தக் காரணத்தால், கழகத்தை ஏதோ என்னவோ என்றெண்ணி மருள்கின்றனர். அந்த மருட்சி தேவையற்றது. கழகம் தங்கள் கட்சியின் வளர்ச்சியைக் குலைப்பதற்கே உருவெடுத்திருக்கிறதோஎன்று அஞ்சுகின்றனர். அந்த அச்சம் பொருளற்றது. கழகம் வளர வளர அடுத்த தேர்தலில் தாங்கள் வரமுடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்குத் தேய்ந்துவருகிறது. அந்தத் தேய்மானம் காரணமற்றது. கிட்டே வந்து, கண்களைத் திறந்து பார்த்ததும், சிறுவனின் உள்ளத்தை சித்திரவதை செய்துவந்த பேய் பேய் அல்ல கைகாட்டி என்பதை உணர்ந்து, மிக மகிழ்ந்து, கைகாட்டி காட்டியவழியே அவன் சென்றதைப் போலத்தான், இவர்களும், கழகத்தின் கிட்டே நெருங்கி வந்து, அதன் உண்மை உருவத்தை கண்திறந்து பார்ப்பார்களானல், அது, அச்சம் தரும் பொருளல்ல, தங்கள் வாழ்க்கையும் தம் அனைய மக்கள் தொண்டர்கள் அனைவரின் வாழ்க்கையும் எவ்வழி செலுத்தப்பட வேண்டும், எவ்வழி செலுத்தப்பட்டால் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது என்பதை நன்கெடுத்துரைக்கும் நல்லதோர் கைகாட்டி அல்லது வழிகாட்டி என்பதை அறிவர். அறிந்து அது காட்டும் நல்வழி நடப்பர். நடப்பின், தங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வான்பொருளை இதுவரை பேய் என்றெண்ணிப் பயந்துகிடந்த தம் பேதமையை நினைந்து சிந்தைமிக நொந்து, நம் சிறுமதி இதுநாள் வரை இருந்தவாறென்னேஎன்னே என்று தம்மையே தாம் நொந்து உரைப்பர். இது உறுதி!

* * *

சென்னை காங்கிரஸ் சர்க்கார் இந்த ஆண்டு வெளியிட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வாழைப்பழம், உருளைக் கிழங்கு, மிளகாய், தேங்காய், முந்திரிப் பருப்பு, மணிலாக்கொட்டை, கரும்பு, மிளகு, காப்பிக்கொட்டை ஆகிய உணவுப் பொருள்களுக்கெல்லாம் வரி விதித்திருககிறார்கள் அல்லவா இந்த வரி விதிப்பு கொடுமையானது என்பதை எடுத்துக் காட்டி சர்க்காரை எச்சரிக்க ஆசைப்பட்டார் ஒரு காங்கிரஸ் எம்.எல்.ஏ! வரிகளை விதித்திருப்பது நம்ப சர்க்கார், ஆகவே அவைகளை எதிர்த்துப் பேசக்கூடாது, வரி விதிப்பைக் கண்டிக்கக் கூடாது, என்றில்லாமல் சர்க்கார் செய்த தவறை சொந்தக் கட்சி என்ற பாசத்தையும் பாராமல் தைரியமாகக் கண்டிக்க முன் வந்தாரே அந்த எம்.எல்.ஏ, அதற்காக அவரைப் பாராட்டுகிறோம், ஆனல் வரிகளை எதிர்த்த அந்த எம்.எல்.ஏ என்ன சொல்லி எதிர்த்திருக்கிறார் தெரியுமோ? இவை ஏழைகளைப் பாதிக்கும் வரிகள் ஆகவே கூடாது என்ரு? அல்ல! ஏழைகள் முன்னமே உள்ளம் நொந்து கிடக்கிறார்கள், நாம் மேலும் புதுவரிகளை அவர்கள்மீது சுமத்துவது வெந்த புண்ணில் வேலிடுவது போன்ற கொடுமை, எனவே கூடாது, என்ரு? அல்ல! சர்க்காரிடத்திலே இருப்புத் தொகை ரூபா 20 கோடிக்குமேல் இருக்கிறது, பணம் தேவையானல் அதிலிருந்து எடுத்துக் கொள்ளலாமே, புது வரி ஏதுக்கு என்ற காரணத்தைக் காட்டியா? அல்ல! உப்பு வரி ஏழைகளைப் பாதிக்கும் ஆகவே உப்பு வரியை ஒழிக்கவேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு ‘உப்பு சத்தியாக்கிரகம்’ புரிந்த நாமா வாழைப்பழ வரியையும் உருளைக் கிழக்கு வரியையும் போடுவது?—இது மறைந்த உத்தமர் காந்தியாருக்கு நாம் செய்யும் துரோகம் ஆகாதா, இது முறையா, தருமா இச் செயல் புரிவது என்று இத்தகைய காரண காரிய விளக்கம் காட்டியா? அல்ல! அல்ல! அந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ, புது வரிகள்

கூடாது என்பதற்குக் காட்டியிருக்கும் காரணம்—அந்த எம்.எல்.ஏ.வின் பெயர் **நாகராஜமணியகாரர்—"இப்படிப் புது வரிகள் போடுவதினாலே கருஞ்சட்டைக்காரர்கள் கரம் ஓங்கும், நம்மை ஏழைகளை வதைக்கும் சர்க்கார் என்று பேச அவர்களுக்கு வசதி ஏற்பட்டுவிடும், ஆகையால் தயவு செய்து இந்த வரிகளை எடுத்துவிடுங்கள்"** என்பது!

கருப்பு, எவ்வளவு அச்சத்தைத் தந்திருக்கிறது அன்பர் நாகராஜ மணியகாருக்கு!

* * *

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் இந்த வாரம் செங்கற்பட்டு மாவட்டத்தில் பவனி வந்திருக்கிறார். ஊருருக்கும் சென்று ஆங்காங்குள்ள காங்கிரஸ் ஊழியர்களைப் பேட்டி கண்டு, நீங்கள் இனி இடைவிடாத பிரசாரம் செய்து தானாக வேண்டும் என்று அவர் வற்புறுத்தியிருக்கிறார். அவர் தலைவர் ஆகவே, தொண்டர்கள் செய்ய மறந்துபோன அலுவல் செய்திருக்க வேண்டிய பிரசாரப் பணியை அவர் நினைப்பூட்டுகிறார்! அது நியாயம்! ஆனால் பிரசாரம் தேவை என்று சுழல்சுற்றுப் பயணம் செய்து ஆட்களைக் கூட்டிவைத்து, வட்டாரந்தோறும் சென்று முரசு கொட்டியிருக்கிறாரே காமராஜர், பிரசாரம் ஏனாம் தெரியுமா, வேகமாகச் செல்வாக்கடைந்து வரும் கருஞ்சட்டைக்காரர்களை விரைவாக நசுக்குவதற்காம்! சொல்லியிருக்கிறார் காமராஜர்! கருப்பு, காமராஜரை எவ்வளவு மிரட்டியிருக்கிறது! பட்டி தொட்டியில் எல்லாம் சென்று படை திரட்ட வேண்டிய அளவுக்கு அல்லவா காமராஜருக்கு கருத்தில் கவலையை மூட்டியிருக்கிறது கருப்புச் சட்டை!

* * *

அமைச்சர் அவினாசிலிங்கம் அண்மையில் ஓர் அறிக்கை பிறப்பித்திருக்கிறார். அந்த அறிக்கையின்படி ஆரம்பப்பள்ளி உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றின் நூல் நிலையங்களில் "வகுப்புத் துவேஷத்தை மூட்டும்" கருஞ்சட்டைக்காரர்களின் புத்தகங்கள் இருக்கக் கூடாதாம்! கருப்பு! அது என்ன நெருப்பா! கருப்பைக் கண்டு அவினாசியாருக்கு எரிச்சல் இவ்வளவு ஏற்படவேண்டிய காரணம் என்ன?

* * *

"ஹிந்தி வீரர்" சர்தார் வேதரத்தினம், சென்னை சட்டசபையில், சென்ற கிழமை, ஓர் அபூர்வமான யோசனையை தன் அலாதியான திறமையால் கண்டுபிடித்து, தன் ஆசைக்குரிய ஆளவந்தார்களுக்கு, ஆனந்தத்தோடு அளித்திருக்கிறார்.

அது, —இது: "தமிழகத்தின் அமைதியைக் குலைத்துக்கொண்டிருக்கும் கருப்புச் சட்டைக்காரர்களை வடஇந்தியாவில் எங்கேனும் சிறைகளில் அடைத்துவைத்தால் என்ன?"

தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் இவர்களை அடைத்தால் அங்கேயும் புரட்சிமுழக்கம் புரிந்து சிறைச்சாலைகளையும் தவச்சாலையாக்கிவிடுகிறார்கள்; எனவே வட இந்தியச் சிறைகளில் தள்ளினால்தான் ஹிந்திமொழி தெரியாத காரணத்தால் இவர்கள் பிரசாரம் அங்கு நடவாதிருக்கும் என்று இவ்வளவு தூரம் எண்ணிப் பார்த்து இத்தனை விசித்திரமான யோசனையைத் தந்திருக்கிறார் விசித்திர சித்தர் வேதரத்தினம்!

கழகப் பிரசாரத்தைக் கண்டு வேதரத்தினங்களின் நெஞ்சம் இவ்வளவு நடுநடுங்குவானேன்? கழகம் என்ன புலியா சிங்கமா இவர்களை விழுங்கிவிட? இவ்வளவு பயம் இவர்களுக்கு எதற்காக?

* * *

முதலமைச்சர் ஓமந்தூரார் இந்த வாரம் சென்னை கிறித்தவக் கல்லூரி தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவில் பேசியிருக்கிறார்! தமிழ்ச்சங்கவிழாவில் பேசியிருக்கிறார் என்றவுடனே, எவரும், தமிழர் கலை, நாகரிகம், பண்பு, இலக்கியம், தமிழகத்தின் மேன்மை, தமிழின் சிறப்பு முதலியவற்றைப்பற்றித்தான் பேசியிருப்பார் என்று நினைப்பர். நம்மைப்போன்ற சாமானியர்களாயிருந்தால் அப்படித்தான் பேசியிருப்போம், ஆனால் ஓமந்தூரார் என்ன சாமானியரா? ஆறு கோடி மக்கள் நிறைந்த இந்த மகத்தான சென்னை மாகாணம் முழுவதையும் ஆளும் முழு உரிமை படைத்த முதலமைச்சர் அல்லவா? ஆகவே அவர் இந்தச் "சின்ன" சங்கதிகளையெல்லாம் அங்கே பேசுதற்குரிய கருப் பொருளாகக் கொள்ளாமல் கருஞ்சட்டைக்காரர்களின் வகுப்புத் துவேஷ மனப்பான்மையைப்பற்றி வெளுத்து வாங்கியிருக்கிறார் அந்தக் கல்லூரி மேடையில்! கிறித்தவக் கல்லூரிக்குப் போயுங்கூட கருப்புச் சட்டைப் பயம் தெளியவில்லை அமைச்சர் ஓமந்தூராருக்கு! அடே அப்பா! இந்தச் சிறிய கருப்புச் சட்டை அந்தப் பெரிய முதலமைச்சரையும் அல்லவா அச்சபுரியில் உலவச் செய்கிறது! கழகம் என்றால் இனி கடவுளும் அஞ்சுவார்போல் இருக்கிறதே! என்னதான் இருள் நிறைந்திருந்தாலும் ஓமந்தூராருமா கைகாட்டி மரத்தைப் பேய் என்றெண்ணிப் பதைபதைப்பது?

* * *

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் வந்ததே சட்டசபைக்கு, அப்போது, அதனை எதிர்த்து வீரகர்ஜனை புரிந்தாரே வைத்தியநாதய்யர், அவர் அந்த மசோதா தீமை பயப்பது என்பதை எடுத்துக் காட்ட என்ன வாதத்தைக் கையாண்டார் தெரியுமோ? "திரா

விடுதலையும் வரவேற்பும்

குடந்தையில் அறப்போர்த் தளபதிகளாக இருந்து அரும்பணி ஆற்றிய **தோழர் N. V. நடராசன், தோழியர் மணி அம்மையார்** ஆகியோர் 2-மாத சிறைவாசத்திற்குப் பிறகு சென்ற கிழமை விடுதலை ஆயினர். விடுதலை ஆன வெற்றி வீரர்களைப் பாராட்ட சென்னையில் 3-3-49 மாலை காஞ்சி மணிமொழியார் தலைமையில் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. C. D. T. அரசு, பாவலர் அப்துல்காதர் ஆகியோர் பேசியபிறகு, **பெரியார்,** சிறைப்பறவைகளை வரவேற்றும் பாராட்டியும் நீண்ட நேரம் அரிய விரிவுரை நிகழ்த்தினார். கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டு குழுமியிருந்த காட்சி சிறைமீண்ட தோழர் நடராசன், தோழியர் மணி அம்மையார் ஆகியோரின் அரிய தொண்டின் மாட்சிக்கோர் சாட்சியாக விருந்தது. வீரர்களே, வருக வருக என நாமும் நல்வாழ்த்துக் கூறுகிறோம்.

விடர் கழகப் பத்திரிகைகள் இந்த மசோதாவை ஆதரிக்கின்றன. மசோதா கேடுதருவது என்பதை விளக்க இது ஒன்றே சான்று.'' என்றார் வைத்தியநாதர். கழகம் ஆதரிக்கிறது என்பதை எடுத்துச் சொல்லிவிட்டாலே போதும், சட்டசபை உறுப்பினர்கள் நிச்சயம் இதை எதிர்த்தே தீர்வர் என்ற திடநம்பிக்கை அவருக்கு! கழகம் என்ன அவ்வளவு அச்சம் தரும் பொருளா!

* * *

அறநிலையத் திருத்த மசோதாவை எதிர்த்துப் பேசிய தோழர் அண்ணாமலை பிள்ளை, சகஜாநந்த சாமி போன்ற காங்கிரஸ் எம். எல். ஏக்கள் "இந்த மசோதா நிறைவேறி விட்டால், இப்பொழுது பதவியிலிருக்கும் நாம் வெளியேற நேரும். அடுத்த தேர்தல் கருப்புச் சட்டைக்காரர்கள் நாம் இருக்கும் இடத்திற்கு வந்துவிடுவர், மடங்களே ஏன் இருக்க வேண்டும் என்று கேட்கவும் ஆரம்பித்துவிடுவர். எனவே இந்த மசோதா ஆபத்தானது'' என்று இடிமுழக்கம் புரிந்திருக்கின்றனர்.

மசோதாவை ஆதரித்துப் பேசிய தோழர்கள் பட்டாபிராமன், கோசல்ராம், பாகநேரி சாமிநாதன் காமேஸ்வரராவ் போன்றவர்கள், "இந்த மசோதா சட்டமாக்கப்படாவிட்டால் மடங்களும் கோயில்களும் ஒரேயடியாக ஒழிக்கப்பட்டுவிடவேண்டும் என்று பிரசாரம் செய்து வரும் கருப்புச் சட்டைக்காரர்களின் கரமே ஓங்கும் என்பது வைத்தியநாதய்யருக்குத் தெரியாதா?'' என்று போர்முரசு கொட்டியிருக்கின்றனர்!

மசோதாவை ஆதரிப்பவர்கள், மசோதா நிறைவேறாவிட்டால் கருப்புச்சட்டைக்காரர்கள் பலம் வளரும் ஆகவே மசோதா வாழ்க என்று கூறவும், **மசோதாவை எதிர்ப்பவர்கள்**, மசோதா நிறைவேறிவிட்டால்தான் அவர்கள் கை ஓங்கும் ஆகவே மசோதா ஒழிக என்று கூறவும், ஆக இரு சாராரும் கருப்புச் சட்டையைக்கண்டு அஞ்சவுமான நிலையை ஏற்படுத்திவிட்டது மடாலயத் திருத்த மசோதா!

கழகம் அல்லது கருப்புச்சட்டை என்றால் உள்ளம் இப்படியா நடுங்க வேண்டும் காங்கிரஸ் எம். எல். ஏக்களுக்கு? பரிதாபம்! பரிதாபம்!!

* * *

தொலைவிலே இருக்கும் கைகாட்டியை, நடுவிலே இருக்கும் இருளின் காரணமாக, பேய்தான் என்றெண்ணிக்கொண்டு நடுங்கினானே காட்டு வழியில் சிக்கிய சிறுவன், அந்த நடுக்க நிலையிலே இருக்கின்றனர் காங்கிரஸ்காரர்கள் இதுபோது! அச்சம் உள்ளத்தை உலுக்கினாலும் வருவது வரட்டும் என்று கொஞ்சம் கொஞ்சமாக "பேயை'' நோக்கி முன்னேறினானே இறுதியில் சிறுவன், அதுபோல, இவர்களும் அடிமேல் அடிவைத்து கழகத்தை நோக்கி முன்னேறிய வண்ணம் இருக்கின்றனர்–அதற்குச் சான்று இப்போது வந்துள்ள மடாலய மசோதா ஒன்று போதும்! கைகாட்டியின் அருகே வந்ததும், சிறுவன், **"பேய் அல்ல இது கைகாட்டி!"** என்று தெரிந்து, தன் சிறுமதியை எண்ணி, தனக்குத் தானே சிரித்துக் கொண்டானே, அதுபோல, இவர்களும் கழக இலட்சியங்களுக்கு வெகு அருகே வந்துவிட்டதும் தெளிவாக அறிந்துகொள்வர் திராவிடர் கழகம் அச்சத்திற்குரிய பொருள் அல்ல, தம் இருதயத்திலே வைத்துப் போற்ற வேண்டிய இன்பப் பொக்கிஷம் என்பதை! **"பேய் அல்ல, கைகாட்டிதான்"** என்பதை அறிந்ததும், சிறுவன், அந்த "மாஜி பேய்'' காட்டிய வழியிலேயே மகிழ்ச்சியோடு செல்லவில்லையா, அதுபோலத்தான் இவர்களும் கழக இலட்சியங்களின் 'ருசி'யை சற்றே அறிந்ததும், கழகம் காட்டும் இலட்சியப் பாதைவழியே நடந்து, இன்பத் திராவிடம் எனும் சமதர்மபுரியை அடையச் சிறிதும் தயங்கமாட்டார்கள்! ஆனால் அந்த 'ருசி'யை உணரும்வரை அவர்கள், கழகத்தைக் கண்டு மிரண்டு, அந்த மிரட்சியின் காரணமாக 'மருள் மொழி' பல வீசிக்கொண்டுதான் இருப்பர், அதற்காக நாம் அவர்களைக் கோபிக்கத் தேவையில்லை, கோபிப்பது அர்த்தமற்றது கூட!

——

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லோரிடத்திலும் பரவுகிறது. அமைதி குலைகிறது, குழப்பம் எங்கணும் மேலிடுகிறது. குழப்பத்தை அடக்க சர்க்காருக்குத் தெரிந்த ஒரே ஒரு ஆயுதம் அடக்குமுறை. அதனை அவர்கள் உடனே ஏவுவார்கள், ஏவினால் குழப்பம் குறைவதில்லை, அதிகமாவதுதான் சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி குழப்பம் உண்மையிலேயே குறைய வேண்டுமானால் விலைவாசிகள் இறங்கவேண்டும், விலைவாசிகள் இறங்கவேண்டுமானால் உற்பத்தி பெருகவேண்டும், உற்பத்தி பெருகுவதற்கோ முதலாளிகளின் தயவு வேண்டும். எனவே சர்க்கார் முதலாளிகளுக்குப் பணிய வேண்டி ஏற்படுகிறது—பணிந்தால் தான் உற்பத்தி பெருகும், விலைவாசி இறங்கும், குழப்பம் குறையும் என்கிற நிலை ஏற்பட்டு விடுகிறது. தம்முடைய ஆதிக்கத்தைக் குறைக்க எண்ணும் எந்த சர்க்காரையும் முதலாளிகள் பணிய வைப்பது இந்தப் பொருளாதார தந்திரத்தைக் கையாண்டுதான். இப்போது, இந்திய சர்க்கார், வணிக வேந்தர்களுக்குப் பணிந்து பயந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலை நேரிட்டிருப்பதற்குக் காரணமும், தலால்களும் டால்மியாக்களும் இந்த முறையைக் கையாண்டதுதான்!

எந்த சர்க்காருமே—இந்திய சர்க்காரும்தான்—கொஞ்சம் யூகமும், சிறிதளவு தைரியமும், மக்களிடத்திலே தளராத ஆதரவும், பொதுவுடமைத் திட்டத்திலே பரிபூரண விருப்பமும் படைத்தவர்களாக இருந்தால், முதலாளிமார்கள் விரிக்கும் இந்த சூழ்ச்சி வலையை அறுத்தெறிய முடியும், அவர்களுக்கு நாட்டின் பொருளாதார இயந்திரத்தின் மீதுள்ள இரும்புப்பிடியையும் தகர்த்தெறிய முடியும், சமதர்ம ஆட்சியையும் சிறுகச் சிறுக ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாக நாட்டிலே நிறுவவும் முடியும். ஆனால் இந்திய சர்க்காருக்கோ யூகமும் இல்லை, தைரியமும் இல்லை, மக்களிடத்திலே ஆதரவும் இல்லை, பொதுவுடமை இலட்சியத்திலே பற்றுதலும் இல்லை, எனவே முதலாளிமார்கள் தங்களுடைய வழக்கமான போர் முறையைக்

கையாளத் தொடங்கியவுடனே இந்திய சர்க்கார் சுருண்டுவிட்டனர். பிர்லாக்கள் தங்கள் ஆயுதத்தைக் கரத்திலே சரியாக ஏந்தக்கூட இல்லை, அதற்குள்ளாகவே, இந்திய சர்க்கார், அவர்களுக்கு அஞ்சி நடுங்கி, சரணாகதிப்படலம் வாசிக்கத் தொடங்கிவிட்டனர்.

முதலாளித்வ முறையிலே ஊறித் திளைத்த ஏகாதிபத்திய நாடு இங்கிலாந்து. ஆனால் அத்தகைய இங்கிலாந்திலே, தொழிற் கட்சியினர், சர்க்காரைக் கைப்பற்றிய இந்த நான்கைந்து ஆண்டுகளுக்குள்ளாக, முதலாளித்வத்தின் முதுகெலும்பை முறித்துவிட்டிருக்கின்றனர். இங்கிலாந்திலேயே மிக முக்கியமான முதலாளித்வ முகாம் நிலக்கரித் தொழில்! அதனை எடுத்த எடுப்பிலேயே பொதுவுடமை ஆக்கிவிட்டார்கள் தொழிற்கட்சி சர்க்கார். பிறகு வரிசை வரிசையாக, இரும்பு, எஃகு சுரங்கங்கள், அவற்றின் தொழிற்சாலைகள், இரயில்வேக்கள், பாங்கிகள் முதலிய முக்கியமான முதலாளித்வக்கோட்டைகளை எல்லாம் சர்க்காரின் மாளிகைகளாக ஆக்கிவிட்டனர்! அதாவது, அவைமக்களின்பொதுச் சொத்தாக ஆகிவிட்டன! அங்கேயும் முதலாளிகள் இல்லையா! இருக்கிறார்கள்! அவர்களுக்கும் இந்திய முதலாளிகளைப்போல பணப்பையை இறுக்கி, உற்பத்தியைக் குறைத்து, பொருளாதார வாழ்வை ஸ்தம்பிக்கச் செய்து சர்க்காரைப் பணியவைக்கத் தெரியாதா? தெரியும்! அவர்களின் திறமை இந்திய முதலாளிகளின் திறமையைவிட மட்டமானதா? அல்ல—இவர்கள் முதலாளித்வ அரிச்சுவடியைக் கற்றுக்கொண்டதே அவர்களிடமிருந்துதான்! பிறகு எப்படி முதலாளிகளின் உற்பத்திக் குறைப்புப் போர்முறை இங்கிலாந்தில்தோற்றுவிட்டது இந்தியாவில் மட்டும் மிக எளிதில் வெற்றிமுரசு கொட்டியிருக்கிறது? இங்கிலந்தை ஆளும் தொழிற்கட்சியினருக்கு தைரியம் இருந்தது, சமதர்ம இலட்சியத்தினிடம் தளராத காதல் இருந்தது, எனவே சர்க்கார் வென்றனர், முதலாளிகள் முகாரி பாடியவண்ணம் மூலைக்குச் சென்றனர்—அங்கு! ஆனால் இந்தியாவை ஆளும் காங்கிரஸ் கட்சினருக்கோ தைரியமும் இல்லை, சமதர்ம கீதத்திடம் மனதைப் பறிகொடுக்கும் உயரிய பண்புமில்லை, எனவே சர்க்கார் தோற்றனர், பிர்லாக்கள் வென்றனர்—இங்கு!

இந்திய சர்க்கார் எப்படி நடந்துகொண்டிருந்தால் முதலாளித்வ போர்முறையை முறியடித்திருக்க முடியும் என்பதை பிறகோர் முறை கூறுவோம், இதுபோது, இந்திய சர்க்கார், முதலாளிமார்களுக்குப் படிப்படியாகப் பணிந்து வந்திருக்கிற வரலாற்றை மட்டும் இங்கு சுருக்கமாகக் கூறவிழைகிறோம். இந்தச் சரணாகதி வரலாறு, வேடிக்கையாக இருக்கும் படிப்பதற்கு ஆனால் அதே சமயம் சமதர்ம நோக்கம் படைத்தவர்க்கெல்லாம் வேதனையை மூட்டுவதாகவும் இருக்கும்.

ஸ்ட்ரைக்கை முறிக்கும் படலம்

முதலாளிமார்களுக்கு தங்களுடைய பணிவையும் அன்பையும் தெரிவித்துக்கொள்வதற்காக இந்திய சர்க்கார் முதலிலேகையாண்ட முறை, இந்தியாவில், எங்கே, எவ்வளவு நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக, யார், வேலைநிறுத்தம் செய்தபோதிலும் அந்த வேலைநிறுத்தத்தை உடைப்பதற்காக தங்களுடைய சக்தி முழுவதையும் செலவிடுவது என்பதுதான். கூலி போதவில்லை என்பதற்காகவோ, வேலை வாங்குவோர் கொடுமை செய்கின்றனர் என்பதற்காகவோ வேறு எந்த நியாயமான காரணத்திற்காகவோ, தொழிலாளர்கள் எந்த தொழிற்சாலையிலாவது வேலை நிறுத்தம் செய்தால், சர்க்கார் உடனே தங்கள் போலீசையும் போலீஸ் போதாவிட்டால் இராணுவத்தையும் தொழிலாளர்கள்மீது ஏவுவதும், காரணமின்றி அவர்களைச் சித்திரவதை செய்வதும், இல்லையேல் சிறையில் பிடிப்பதும், தடியால் அடிப்பதும் கண்ணீர்ப்புகை வீசுவதும் தலைவர்களை விசாரணையின்றி காராகிருகத்தில் அடைப்பதும் அவர்கள் பத்திரிகைகளை ஒடுக்குவதும் ஆகிய இந்த முறைகளைக் கையாண்டு, வேலைநிறுத்தம் பயனற்றுப் போகும்படி செய்து வரலாயினர். சர்க்கார் இதுபோல தொழிலாளிகளுக்குத் தண்டனையும் முதலாளிகளுக்குப் பாதுகாப்பும் அளித்தனர்—என்றாலும் முதலாளிகள் இந்தச் "சிறு சலுகை" கண்டு சித்தம் களித்துவிடவில்லை, "இது என்ன பிரமாதம்! இது ஒரு உதவியா" என்றுதான் கேலி பேசலாயினர் சர்க்காரைப் பார்த்து!

போட்டிச் சங்கப் படலம்

வேலை நிறுத்தங்களை அடக்குமுறை ஆயுதம் கொண்டு முறித்துத் தள்ளுவதால் மட்டும் முதலாளிகளின் உள்ளம் குளிரவில்லை என்பதை உணர்ந்த சர்க்கார், பிறகு, வேலை நிறுத்தங்கள் அடிக்கடி தொழிலாளர் வட்டாரத்தில் நடைபெறுவதற்கு மூலகாரணமே அவர்களுக்குள்ளே இருக்கும் கட்டுப்பாடும், அந்தக் கட்டுப்பாட்டைப் போற்றி வளர்க்கும் தொழிற் சங்க காங்கிரஸ் என்னும் அவர்களுடைய கழகமும்தான் என்பதை அறிந்து, அந்த தொழிற்சங்க காங்கிரசின் செல்வாக்கை சிதைப்பதற்காக, பணமூட்டைகளின் பக்கபலத்தைக் கொண்டு, தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் என்னும் புதியதோர் அமைப்பை நிறுவினர். பணத்தாசை ஊட்டி ஏழைத்தொழிலாளரை அவர்களுடைய தொழிற்சங்கத்திலிருந்து பிரித்து இந்த முதலாளித்வ தொழிற் சங்கத்தில் சேர்த்துவிடப் பார்த்தனர். என்றாலும் தொழிலாளர்கள் பெரிதும் இந்தச் சூழ்ச்சியை நன்குணர்ந்துகொண்ட காரணத்தால் புதிய சங்கத்தில் சேர மறுத்தனர்—எனவே போட்டிச் சங்கம் அமைக்கும் படலமும் முதலாளிகளின் மனதை மகிழச் செய்து விடவில்லை!

காராக்கிருகப் படலம்

வேலை நிறுத்தங்களை உடைத்ததாலும், போட்டிச் சங்கம் அமைத்ததாலும் முதலாளிகள் சிறிதும் களித்தனரில்லை, தங்கள்மீது காதல் கொண்டனரில்லை என்பதை அறிந்ததும், இந்திய சர்க்கார்,

(4-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)